15.04.2025.

EA.04/2022 in EP.48/2018 in OS.53/2012

RW1-Raj -S/o. Manuvel

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 15.04.2025.

<u>குறுக்கு விசாரணை :</u> (மனுதாரர் தரப்பில்)

1. நான் நிறைவேற்றுகை மனு 2ம் தபசில் சொத்தை 07.02.2012ல் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். நான் மேற்படி சொத்தின் முன் கிரைய அசல் ஆவணத்தை வாங்கி பார்க்கவில்லை. அந்த ஆவணமும் என்னிடம் இல்லை. சார்பதிவாளர் அலுவலக நகல் மட்டுமே பார்வையிட்டேன்.

2. நான் கிரையம் பெற்ற பின் 13.02.2012ம் தேதி இந்த அசல் வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

3. நான் கிரையம் வாங்கும் போது தபசில் சொத்தில் காற்றாலை இருந்தது என்றால் சரிதான்.

4. நான் அசல் வழக்கில் காற்றாலை குறித்து தெளிவான விவரம் மற்றும் விஸ்தீரணத்தை குறிப்பிடவில்லை என்றால் எனக்கு நினைவில்லை.

5. நான் கிரையம் பெற்ற கிரைய சொத்தில் சர்வே எண்.390/4ல் கீழ் பாதி 61 சென்ட் அசல் வழக்கில் 2ம் தபசிலாக காண்பித்துள்ளேன் என்றால் சரிதான்.

6. நான் கிரையம் பெற்ற போதே கிரைய சொத்தின் அனுபவம் என் வசம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல.

7. பொதுவாக ஒரு காற்றாலை நிறுவித்து இயக்குவதற்கு 2 மாதம் ஆகும் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. ஒரே நாளில் காற்றாலை அமைக்க முடியாது என்றால் சரியல்ல.

8. நான் 2ம் தபசில் சொத்தில் உள்ள காற்றாலையை முழுவதுமாக அப்புறப்படுத்தி சுவாதீனம் ஒப்படைக்கக்கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

9. என்னிடம் காண்பிக்கப்படுவது சர்வே எண்.390/4ற்கான இணையவழி வில்லங்க சான்றிதழ் என்றால் சரிதான். சர்வே எண்.390/4ற்கான இணையவழி வில்லங்க சான்றிதழ் ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சி வில்லங்க சான்றிதழானது சார்பதிவாளர் அலுவலக நகல் இல்லை என குறிப்பிட்டார். மேற்படி வில்லங்க சான்றிதழில் தமிழக அரசின் முத்திரை இருப்பதால் ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது.

10. நான் கிரையம் வாங்கும் போது முன் கிரைய ஆவணங்களையும், வில்லங்க சான்றிதழையும் பார்வையிட்டு தான் கிரையம் வாங்கினேன்.

11. நான் கிரையம் பெறும் போது தபசில் சொத்தை அளந்து பார்க்கவில்லை.

12. நான் எந்த வங்கிக்கும் தபசில் சொத்து தொடர்பாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை.

13. அசல் வழக்கின் நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் 2ம் தபசில் சொத்தில் காற்றாலை இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

14. நான் சர்வே எண்390/4ல் மேல்பாதி 32 சென்ட் கிரையம் பெற்றுள்ளேனா என்றால் சரிதான். அந்த 32 சென்டில் 25 செண்ட் ஆனது கீழோரம் தென்வடலாகவும், 7 சென்ட் தெற்கோரம் கிழமேலாகவும் கிரையம் பெற்றுள்ளேன்.

15. சர்வே எண்.390/4ன் மத்தியில் காற்றாலைக்கு செல்லும் பாதை உள்ளது என்றால் இல்லை. நான் வழக்கிற்காக தவறாகக் கூறுகிறேன் என்றும் அசல் வழக்கின் ஆணையர் அறிக்கையில் பாதை உள்ள விவரம் துலங்கும் என்றால் சரியல்ல.

16. நான் பிரச்சனைக்குரிய சொத்து என தெரிந்தே வழக்கு தபசில் சொத்து வம்படியாக கிரையம் வாங்கியுள்ளதால் என் கிரையம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மனுதாரரே நல்லெண்ண கிரையதாரர் என்றும் என் கிரையம் மோசடியானது என்றால் சரியல்ல.

4 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி.